# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar Case No. 01 of 2024

| | |
|---|---|
| Deposition of witness for | : PW2 |
| Name | : ராணி |
| Father's Name | : மாது |
| Village | : வேலம்பட்டி |
| Taluk | : போச்சம்பள்ளி |
| Calling | : விவசாய கூலி |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.

எதிரிகள் ஆஜர் .

முதல் விசாரணை:

அ.சா1 எனது மூத்தார் மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் வருடத்திற்கும் முன்பு நானும் எனது மூத்தார் மனைவி ராஜேஷ்வரி வேலம்பட்டியில் உள்ள ஓயின் சாப் அருகே சாப்பட்டு கடை வைத்து அங்கு இருந்தோம். அப்போது சரசு, கவிதா இன்னும் இரண்டு பேர் மொத்தம் 4 பேர் வந்தார்கள். அப்போது நேரம் மதியம் 12 மணி இருக்கும். அவர்கள் 4 பேரும் கடையில் இருந்த சாமன்கள் உடைத்துவிட்டு அவர்கள் என்னை தலைமுடியை பிடித்து இரண்டாவதாக உள்ள எதிரி ( கவிதா) கீழே தள்ளிவிட்டார். அதனால் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. அருகில் இருந்தவர்கள் என்னை காவேரிபட்டினம் தர்மாஸ்பதிரிக்கு அழைத்துசென்றார்கள். சுமார் 10 பேர் என்னையும் எனது நத்தனாரையும்

பார்க்க வந்தார்கள். அப்போது அவரை ஒருவர் அடித்ததால் கரு உள்ளவே தொங்கியது. போலீசார் வந்து விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

கடையுள்ள இடம் கூட்டம் பகுதி என்றால் சரிதான். யார் யார் அங்கு வந்தார்கள் என்றால் 2 வதாக உள்ள நபர் (கவிதா) வந்து தலைமுடி இழுத்து தள்ளியது மட்டும் தான் தெரியும் மற்றது எதுவும் தெரியாது. எனது குடும்பத்திற்கும் கிருஷ்ணன் குடும்பத்திற்கும் வழி பிரச்சனை இருந்து வருகிறது என்றால் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மேற்படி பிரச்சனையில் எனது மூத்தார் விஜயகுமாரை வெட்டிவிட்டார் என்றாலும் அந்த வழக்கில் இருந்து எனது மூத்தாரை காப்பாற்ற தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கடைக்கு வந்து பொருட்கள் சேதப்படுத்தியதாக கூறுவதும் வழக்கிற்காக கூறுகிறேன் என்றாலும் சம்பவ இடத்தில் விஜயகுமாரை தவிர மற்ற நபர்கள் யாரும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.